

# MACRO ECONOMICS

*By*


**Dr. VELU SURESH KUMAR, MA., M.Phil., Ph.D., MBA.,**
**Assistant Professor & Head**
**PG & Research Department of Economics**
**H.H. The Rajah's College (Autonomous),**

**Pudukkottai, Tamil Nadu – 622 001**

# அலகு 1

# பேரியல் பொருளாதாரம் - இயல்பும் பரப்பும்

## (Macro Economics - Nature and Scope)

பொருளியலை 'நுண்ணியல் பொருளாதாரம்' 'பேரியல் பொருளாதாரம்' என இரு பிரிவுகளாக பிரிக்காலம். இவ்விரு சொற்களையும் 1933–ல் ஆஸ்லோ பல்கலைக்கழகத்தை (Oslo University) சேர்ந்த ரக்னார் ஃபிரிஷ் (Ragnar Frisch) முதன்முதலில் பயன்படுத்தினார். நுண்ணியல் பொருளாதாரத்தை மார்ஷலும், பேரியல் பொருளாதாரத்தை கீன்சும் பிரபலமாக்கினார்கள். "மைக்ரோ" (Micro) என்ற ஆங்கிலச் சொல் MIKROS என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. அதற்கு "சிறியது" என்பது பொருள். "மேக்ரோ" (Macro) என்ற ஆங்கிலச் சொல் MAKROS என்ற கிரேக்கச் சொல்லிருந்து வந்தது. அதற்கு "பெரியது" என்பது பொருளாகும்.

### பேரியல் பொருளாதாரம்

**(1) பொருள்**

பொருளாதார அமைப்பு முறையை மொத்தமாகப் படிக்கக்கூடிய பொருளாதார ஆய்வின் ஒரு பகுதியே பேரியல் பொருளாதாரம் எனப்படும். நாட்டின் மொத்த உற்பத்தி, மொத்த வருமானம், மொத்தச் செலவு, மொத்தச் சேமிப்பு, மொத்த முதலீடு, மொத்தத் தேவை, மொத்த அளிப்பு போன்றவற்றை பேரியல் பொருளாதாரம் ஆராய்கின்றது. எனவே பேரியல் பொருளாதாரத்தை தொகைஇனப் பொருளாதாரம் (Aggregate Economics) என்கிறோம்.

சுருங்கக்கூறின் பொருளாதாரத்தை விரிவாக அல்லது மொத்த மாறிகளை ஆராயக்கூடியதே பேரியல் பொருளாதாரமாகும்.

## (2) இலக்கணம்

R.G.D. ஆலன் (R.G.D.Allen) "விரிவான பொருளாதார தொகுதிகளுக்கிடையில் உள்ள தொடர்பை விளக்குவது பேரியல் பொருளாதாரமாகும்".

J.K. மேத்தா (J.K.Mehta): "பொருளாதாரத்தில் முழுமையான ஒரு அமைப்பைப் பற்றியது பேரியல் பொருளாதாரமாகும். அதில் ஒரு பகுதியைப் பற்றியது நுண்ணியல் பொருளாதாரமாகும்".

குல்பெர்ட்டன (Culberton) : "பேரியல் பொருளாதாரக் கோட்பாடு என்பது வருவாய் , வேலைநிலை, விலைகள், பணம் ஆகியவை பற்றிய கோட்பாடாகும்".

போல்டிங் (Boulding) : "தனிப்பட்ட அளவுகளைப் பற்றி அல்லாமல் மொத்த அளவுகளைப் பற்றி பேரியல் பொருளாதாரம் விளக்குகின்றது. அதாவது தனிநபர் வருமானத்தைப் பற்றியல்லாமல் நாட்டு வருமானத்தைப் பற்றியும், தனிப்பட்ட விலைகளைப் பற்றியல்லாமல் விலைமட்டத்தைப்ப பற்றியும், தனிப்பட்ட உற்பத்தியைப் பற்றியல்லாமல் நாட்டு உற்பத்தியைப் பற்றியும் இவ்வியல் விளக்குகிறது".

## (3) பேரியல் பொருளாதாரத்தின் வரம்பு (Scope) :

பேரியல் பொருளாதாரத்தின் பரப்பளவு அகன்றதாகும். பல்வேறு முக்கியமான நாட்டுப் பிரச்சனைகளையும், பன்னாட்டுப் பிரச்சனைகளையும், பேரியல் பொருளாதாரம் ஆராய்கின்றது. வேலைக் கோட்பாடு, வருமானக் கோட்பாடு, பணக் கோட்பாடு, பொருளாதார வளர்ச்சிக்கோட்பாடு, பேரியல் பகிர்வுக்கோட்பாடு ஆகியவை பேரியல் பொருளாதார ஆய்வு முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன. வால்ரஸ், விக்செல், ஃபிஷர், மால்தஸ், கார்ல்மார்க்ஸ், கீன்ஸ் ஆகியோர் பேரியல் பொருளாதாரத்தை வலியுறுத்தினார்கள்.

வருமானம் மற்றும் வேலைக் கோட்பாடானது நுகர்வுச் சார்பு, முதலீட்டுச் சார்பு மற்றும் வாணிபச்சுழல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாகும். பணக்கோட்பாடானது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தைப் பற்றியதாகும். பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடானது வருமானம், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஏற்படும்

நீண்டகால வளர்ச்சி பற்றியதாகும். பேரியல் பகிர்வுக் கோட்பாடானது நாட்டு வருமானம் எவ்வாறு உற்பத்திக் காரணிகளிடம் வாரம், கூலி, வட்டி, இலாபம் என பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை விவரிக்கிறது.

## (4) பேரியல் பொருளாதாரம் - கருத்து வளர்ச்சி :

கீன்சின் "வேலை, வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" (1936) பேரியல் பொருளாதாரத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நூல் வெளியிடப்பட்ட பின்பு பேரியல் பொருளாதாரம் மிகவும் பிரபலமடைந்தது. இருப்பினும், அதற்கு முன்பிருந்தே பரவலாக இக்கருத்து இருந்து வந்திருக்கிறது.

### அ) தொன்மைப் பொருளியல் அறிஞர்களுக்கு முன்பிருந்த நிலை :

16,17–ம் நூற்றாண்டுகளில் வணிக தத்துவவாதிகள் மொத்தப் பொருளாதார அமைப்பைப் பற்றி கருத்துக்கள் கொண்டிருந்தனர். பன்னாட்டு வாணிபத்திற்கும், நாட்டின் செழிப்பிற்கும் உள்ள தொடர்பை விளக்கினர். இயற்கைவாதிகளின் "செல்வச் சுழற்சி ஓட்டம்" என்ற கருத்து பேரியல் பொருளாதார அணுகுமுறையில் அமைந்திருந்தது.

### ஆ) தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் நிலை :

J.B. சே அவர்களின் அங்காடி விதியின் அடிப்படையில் பொருளாதாரம் தானாக இயங்கும் தன்மையுடையது என தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் நம்பினர். "ஒவ்வொரு அளிப்பும் அதன் தேவையை உருவாக்குகிறது". எனவே பொருளாதாரத்தில் மிகை உற்பத்தி, வேலையின்மை ஆகியவை ஏற்படாது என நம்பினர். இருப்பினும், மிகையான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் தொழிலாளர்களுக்கான தேவை குறைந்து, பண்டங்களின் தேவை குறைந்து பொருள் தேக்கம் ஏற்படலாம் என மால்தஸ் குறிப்பிட்டார். மார்ஷலின் ரொக்க இருப்பு பணஅளவுக் கோட்பாடும் பேரியல் பொருளாதார அடிப்படையில் அமைந்துள்ளது.

### இ) கீன்சின் புரட்சி :

1929-ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார பெருமந்தம் பேரியல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிந்தது. பேரியல்

பொருளாதாரத்தை புகழ்பெறச் செய்த பெருமை கீன்சைச் சாரும். கீன்சின் "பொதுக் கோட்பாடு" பொருளாதாரச் சிந்தனையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வந்தது. "கீன்சின் புரட்சி," "புதிய பொருளாதாரம்" என்ற பெயர்களை பேரியல் பொருளாதாரம் பெற்றது. குறுகிய காலத்தில் மொத்தத் தேவையானது மொத்த அளிப்பைவிடக் குறைவாக இருப்பதால் வேலையின்மை ஏற்படுகிறது என கூறினார். சமநிலை வருமானம் மற்றும் வேலை நிலையானது மொத்தத் தேவையும், மொத்த அளிப்பும் சமப்படும் நிலையில் தோன்றுகின்றது என கீன்ஸ் விளக்கிக் காட்டியுள்ளார்.

### ஈ) கீன்சின் காலத்திற்கு பிந்திய வளர்ச்சி :

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள், புதிய தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஆகியோரிடம் மதிப்புக் கோட்பாடு மற்றும் பணக்கோட்பாடு பற்றிய கருத்து வேறுபாடுகளை நீக்கும் பொருட்டு ஹெபர்லர், பாட்டின்கின் ஆகியோர் உண்மை இருப்பு விளைவுக் கருத்தை உருவாக்கியுள்ளனர். கீன்சின் நுகர்வுச் சார்புக் கருத்து அசலனத் தன்மையுடையதாக உள்ளது. எனவே தற்கால பொருளியல் அறிஞர்கள் இயங்குநிலை நுகர்வுச் சார்பு கருத்தை உருவாக்கியுள்ளனர். ஹெர்ராடு டோமர் அவர்களின் பேரியல் பொருளாதார உருவகமானது பொருளாதார வளர்ச்சி அடைய வருமானம் அதிகரிக்கவேண்டும் என குறிப்பிடுகிறது.

## (5) பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் :

J.K. மேத்தா கருத்துப்படி "சமுதாயத்தில் மனிதன் வாழும் வரையில் பொருளாதார அறிஞர்கள் பேரியல் பொருளாதாரத்தைப் புறக்கணிக்க முடியாது". பேரியல் பொருளாதாரம் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு :

### 1. பொருளாதாரம் முழுமையாக செயல்படுவதை அறிந்து கொள்ள :

சிக்கலாக உள்ள இன்றையப் பொருளாதார அமைப்பு முறை எவ்வாறு இயங்குகிறது என்பதை அறிந்து கொள்ள பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது. பேரியல் பொருளாதாரத்தின் உதவியின்றி மொத்த உற்பத்தி, மொத்த சேமிப்பு, மொத்த முதலீடு போன்ற மாறிகள் செயல்படுவதையும், பொருளாதார அமைப்பையும் புரிந்துகொள்ள முடியாது.

## 2. பொருளாதார வளர்ச்சி :

பினதங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள தடைகளை நீக்கி, அந்நாடுகளின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு பேரியல் பொருளாதார ஆய்வு பயன்படுகின்றது. பின்தங்கிய நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த கொள்கையை உருவாக்குவதில் பேரியல் பொருளாதாரம் வழிகாட்டுகின்றது. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் காரணிகளை அறிந்து கொள்ள உதவுகின்றது. நாட்டு வருமான ஆய்வின் மூலம் பொருளாதார வளர்ச்சியை அளவிட உதவுகின்றது.

## 3. பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க :

வேலையின்மையைப் போக்குதல், முழுவேலை நிலையை அடைதல், நாட்டு வருமானத்தை உயர்த்துதல், விலையை நிலைப்படுத்துதல், வறுமையைப் போக்குதல் ஆகியவை தொடர்பான அரசின் பொருளாதார கொள்கைகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் துணை செய்கின்றது. தற்போதுள்ள பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது. ஜான்சன் கருத்துப்படி, "பொருளாதாரத்தை இயக்கும் அரசின் அனைத்து முயற்சிகளுக்குப் பின்னால் பேரியல் பொருளாதாரக் கோட்பாடு இருக்கின்றது".

## 4. எதிர்காலப் போக்கை அறிந்துகொள்ள :

பொருளாதார வணிகச் சூழ்நிலைகளை எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை அறிந்துகொள்ள பேரில் பொருளாதார ஆய்வு உதவுகின்றது. பேரியல் வருமான, வேலைநிலைக் கோட்பாடுகள் எதிர்கால வணிகச் சூழ்நிலைகளைக் கணிக்க உதவுகின்றன.

## 5. நுண்ணியல் பொருளாதாரத்தை அறிந்து கொள்ள :

நுண்ணியல் பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் துணை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தின் கூலிக் கொள்கையானது நாட்டில் தொழிலாளர்களுக்கான தேவையைப் பொறுத்தது. அத்துடன் நுண்ணியல் பொருளாதார கோட்பாடுகளை சோதித்துப்பார்க்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது.

## 6. வாணிபச் சுழலைக் கட்டுப்படுத்த :

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்படும் வாணிபச் சுழலை (பணவீக்கம், பணவாட்டம்) ஆராய்ந்து அதனைக் கட்டுப்படுத்த, பணம் மற்றும் நிதி நடவடிக்கைகள் எப்போது, எந்த அளவு மேற்கொள்வது என்பதைப் பற்றி தீர்மானிக்க பேரியல் பொருளாதார ஆய்வு உதவுகின்றது.

## 7. நலப் பொருளாதாரம் :

பொருளியலின் முக்கிய குறிக்கோள் சமுதாய நலனை உயர்த்துவதாக இருக்கும்போது, பேரியல் பொருளாதார ஆய்வு அவசியமாகும்.

## (6) பேரியல் பொருளாதாரத்தின் குறைகள் :

பேரியல் பொருளாதார ஆய்வு முறையில் உள்ள குறைகள் பின்வருமாறு :

## 1. பொதுமைப்படுத்தல் தவறானது :

தனிநபர்களின் அனுபவத்திலிருந்து பொதுமுடிவுகளுக்கு வருவது பேரியல் பொருளாதார ஆய்வில் காணப்படும் முக்கியமான குறையாகும். தனிப்பட்டவர்களுக்கு சரியாக இருப்பதெல்லாம் மொத்தத்திற்கும் சரியாக இருக்காது. கீன்ஸ் கருத்துப்படி சேமிப்பானது தனநபருக்கு நல்லதாகும். ஆனால் சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கும். சமுதாயத்தின் சேமிப்பு அதிகமாக இருக்கும்போது செலவு குறைந்து உற்பத்தி குறைவதால் வருமானமும், வேலை வாய்ப்பும் குறைகின்றது.

## 2. தனிப்பட்டவற்றைப் புறக்கணித்தல் :

பேரியல் பொருளாதாரமானது தனிப்பபட்டவர்களை புறக்கணிக்கின்றது. மொத்தத்தில் ஏற்படும் மாற்றங்கள் தனிப்பட்டவர்களைப் பொறுத்தளவில் அதே விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் பொதுவாக செழிப்பான நிலை இருக்கும்போது ஒன்று அல்லது இரண்டு தொழில்களில் பின்னிறக்கம் இருக்கலாம்.

## 3. அளவிடுவதில் சிக்கல் :

பேரியல் மாறிகளை (Variables) கணிப்பது கடினமானதாகும். எடுத்துக்காட்டாக நாட்டு வருமானம், மக்கட்தொகை போன்ற மாறிகளை சரியாக அளவிடுவது எளிதன்று.

## 4. தொகுதியிலுள்ளவை ஒரே சீராக இல்லை :

பேரியல் பொருளாதார தொகுதியில் உள்ளவை நடைமுறையில் வேறுபாடுகளைக் கொண்டவைகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக, மொத்தக் கூலியை தொழிலாளர்களின் எண்ணிக்கையால் வகுத்தால் வருவது சராசரிக் கூலியாகும். ஆனால் கூலி நபருக்கு நபர், தொழிலுக்கு தொழில் வேறுபடுகின்றது.

## 5. மொத்தத்தை அதிகமாக பயன்படுத்துவதில் சிக்கல் :

ஒரு தொகுதியில் உள்ளவை எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, 5ஆப்பிள்கள் + 3 மாம்பழங்கள் +2 ஆரஞ்சுகள் = 10 பழங்கள் என்பதை ஒரு தொகுதியாக கொள்ளலாம். ஆனால் 5 ஆப்பிள்கள் + 2 கார்கள் + 1 கடிகாரம் என்பதை ஒரு அர்த்தமுள்ள தொகுதியாக கருத முடியாது.

## 6. குறைந்த செயல்பாடு :

பேரியல் பொருளாதார உருவகங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. இயக்கமற்ற சூழ்நிலைகளில் இந்த உருவகங்கள் செயல்படும். முக்கியமான மாறிகள் மாறும்போது பேரியல் பொருளாதார உருவங்களை நடைமுறையில் பயன்படுத்த முடியாது.

## (7) நுண்ணியல் பொருளாதாரத்திற்கும், பேரியல் பொருளாதரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் :

1) நுண்ணியல் பொருளாதாரமானது தனிநபர்கள் அல்லது சிறிய அலகுகளின் நடவடிக்கை பற்றியதாகும். ஆனால் பொருளாதாரமானது எப்படி மொத்தமாக செயல்படுகின்றது என்பதைப்பற்றி பேரியல்

பொருளாதாரம் ஆராய்கின்றது. அதாவது காட்டைப்பற்றி முழுமையாக ஆராய்வதைப் போன்றது பேரியல் பொருளாதாரமாகும். அதிலுள்ள ஒரு தனிமரத்தைப் படிப்பதைப் போன்றது நுண்ணியல் பொருளாதாரமாகும்.

2) "மற்றவை மாறாமல் இருந்தால்" என்ற எடுகோளின் அடிப்படையில் நுண்ணியல் பொருளாதாரம் அமைந்துள்ளது. "மற்றவை மாறுகின்றன" என்ற எடுகோளின் அடிப்படையில் பேரியல் பொருளாதாரம் அமைந்தள்ளது.

3) நுண்ணியல் பொருளாதாரமானது பகுதிச் சமநிலை (Partial Equilibrium) ஆய்வைப் பற்றியதாகும். ஆனால் பேரியல் பொருளாதாரமானது பொதுச்சமநிலை (General Equilibrium) ஆய்வைப் பற்றியதாகும்.

4) நுண்ணியல் பொருளாதாரத்தில் தேவை, அளிப்பு ஆகிய இரு காரணிகளை மட்டும் படிக்கின்றோம். ஆனால் மொத்தத் தேவை, மொத்த அளிப்பு, மொத்த வருமானம் ஆகிய மூன்று காரணிகளை பேரியல் பொருளாதாரத்தில் படிக்கின்றோம்.

5) நுண்ணியல் பொருளாதாரமானது ஒரு தனிப்பட்ட பண்டத்தின் விலை நிர்ணயத்தைப் பற்றி ஆராய்கின்றது. ஆனால் பேரியல் பொருளாதாரமானது பொது விலைமட்டத்தைப் பற்றி ஆராய்கின்றது.

6) நுண்ணியல் பொருளாதாரமானது முழுவேலை நிலை நிலவுவதாக கருதுகின்றது. ஆனால் பேரியல் பொருளாதாரத்தில் முழுவேலைநிலை ஆய்வு பொருந்தாது.

## நுண்ணியல் பொருளாதாரத்திற்கும் பேரியல் பொருளாதாரத்திற்கும் உள்ள தொடர்பு:

நுண்ணியல் பொருளாதார ஆய்வு முறையும், பேரியல் பொருளாதார ஆய்வு முறையும் வெளிப்படையாகத் தோன்றுவதைப் போல ஒன்றோடொன்று முரண்பட்டோ போட்டியிட்டோ இருப்பதில்லை. இரு ஆய்வு முறைகளும் ஒன்றோடொன்று இணைந்தவை. நெருங்கிய தொடர்புடையவை. ஒரு ஆய்வுமுறை முழுமைபெற இன்னொரு ஆய்வுமுறை துணை செய்கின்றது.

நுண்ணினப் பொருளியலில் ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண பேரியல் பொருளாதார ஆய்வுமுறையும் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனம் கொடுக்கும் கூலி வீதமானது அப்பகுதியிலுள்ள பிற நிறுவனங்களில் உள்ள கூலி வீதம், தொழிலில் உழைப்பிற்கான தேவை, நாட்டில் உழைப்பிற்கான தேவை ஆகியவற்றைப் பொருத்ததாகும். இவ்வாறு கூலி நிர்ணயம் நுண்ணியல் பொருளாதாரப் பிரச்சனையாக இருந்தாலும், அதனைத் தீர்மானிக்க பேரியல் பொருளாதார ஆய்வு உதவுகின்றது.

இதே போன்று பேரியல் பொருயியலில் ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண நுண்ணியல் பொருளாதார ஆய்வுமுறை துணை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, பொது விலைமட்டமானது பேரியல் பொருளாதாரத்தைச் சார்ந்ததாகும். ஆனால், பொது விலைமட்டமாவது பல்வேறு பண்டங்களின் விலையினால் (நுண்ணியல் பொருளாதாரம்) நிர்ணயிக்கப்படுகிறது. அதேபோன்று நாட்டு வருமானமானது தனிநபர்களின் வருமானத்தின் மொத்தமேயாகும்.

தற்போது சூழ்நிலை மற்றும் தேவைக்குத் தகுந்தவாறு நுண்ணியல், பேரியல் பொருளாதார ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தனி அலகுகளை ஆராய நுண்ணியல் பொருளாதார ஆய்வு முறையும், பொருளாதாரத்தை மொத்தமாக ஆராய பேரியல் பொருளாதார ஆய்வும் பயன்படுத்தப்படுகின்றன. பன்னாட்டு வணிகம், தொழில் பின்னிறக்கம் போன்றவற்றில் இரண்டு ஆய்வு முறைகளையும் நாம் பயன்படுத்துகின்றோம். நிறைவாக சாமுவேல்சன் கூற்றுப்படி, "உண்மையில் நுண்ணினப் பொருளியலுக்கும், பேரியல் பொருளியலுக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. இரண்டும் முக்கியமானவை. ஒன்றை அறிந்து மற்றதை அறியாமல் இருந்தால் நீங்கள் பொருளியலை பாதி கற்றவராக இருப்பீர்கள்".

# அத்தியாயம் 2


# தேசிய வருவாய்

## 2.1 அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடும் ஒரு முழுமையான அளவு கோலை தேசிய வருவாய் தருகிறது. ஒரு நாட்டின் வாங்கும் சக்தியை குறிப்பிடும் காரணியாக இருக்கிறது. உண்மை தேசிய வருவாயின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மாறும் விகிதத்தைப் பொருத்தே பொருளாதாரத்தின் வளர்ச்சி அளவிடப்படுகிறது. பொருளாதாரத் திட்டமிடுதலுக்கான ஒரு கருவியாக இது திகழ்கிறது. மேலும் இது ஒரு மிக முக்கிய பேரினப் பொருளியல் மாறியாகவும் இருக்கிறது. எனவே தேசிய வருவாயின் பொருள், பல்வேறு கருத்துருக்கள், அளவிடும் முறைகள் மற்றும் பயன்களை தெளிவாக புரிந்து கொள்ளுதல் அவசியம் ஆகும்.

நோபல் பரிசு பெற்றுள்ள சைமன் குஷ்நெட்ஸ் (Simon Kuznets) இந்தக் கருத்துருவை முதலில் அறிமுகப்படுத்தினார்.

## 2.2 தேசிய வருவாயின் பொருள்





பொதுவாகக் கூறப்போனால், தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும்.

## 2.3 இலக்கணம்

"ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துகின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத்தொகை ஆகும்".

–ஆல்ஃபிரட் மார்ஷல் (Alfred Marshall)




ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யில் வரையறுக்கப்பட்ட நிலையில் தேசிய வருமானம் அளவிடப்படுவதின் மூலம் அந்நாட்டின் நலத்தை அறிய முடியும்... அதிக வளர்ச்சிக்கான இலக்குகள் எதற்காக எப்படி என்பதை வரையறுக்க வேண்டும்.

"ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர வெளியீடாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்கு செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது"

– சைமன் குஸ்நட்ஸ்

## 2.4 தேசிய வருவாயின் அடிப்படைக் கருத்துருக்கள்

தேசிய வருவாயை அளவிடுவதற்கு கீழ்கண்ட கருத்துருக்கள் பயன்படுகின்றன.

2.4.1. GDP

2.4.2. GNP

2.4.3. NNP

2.4.4. காரணிச் செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at factor cost)

2.4.5. தனிநபர் வருமானம் (Personal Income)

2.4.6. செலவழிக்கக் கூடிய வருமானம் (Disposable Income)

2.4.7. தலா வருமானம் (Per capita Income)

2.4.8. உண்மை வருமானம் (Real Income)

2.4.9. GDP குறைப்பான் (GDP Deflator)

### 2.4.1. மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product: GDP)

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும். இதற்கு சந்தையில் நிலவும் விலை பயன்படுத்தப்பட்டால் இது சந்தைவிலையின் GDP என அழைக்கப்படுகிறது.

செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும்
$GDP = C + I + G + (X – M)$.

இதில் C = நுகர்வு பண்டங்கள்;

I = முதலீட்டு பண்டங்கள்,

G = அரசின் வாங்குதல்கள்;

(X – M) = நிகர ஏற்றுமதி (இது நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ இருக்கலாம்.

#### (அ) நிகர உள்நாட்டு உற்பத்தி (Net Domestic Product: NDP)

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். ஒரு நாட்டில் உள்ள சில முதலீட்டுக் கருவிகள் உற்பத்தி செய்யும் போது தேய்மானம் அடையலாம், பழுதாகிப் போகலாம் அல்லது பயனற்று போகலாம். தேய்மானத்தின் மதிப்பை GDPயிலிருந்து கழித்துவிட்டால் கிடைப்பது NDP ஆகும்.

| | |
|---|---|
| நிகர உள்நாட்டு உற்பத்தி | = GDP – தேய்மானம். |

### 2.4.2 மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product) (GNP)

மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும். இதில் நிகர வெளிநாட்டு வருமானமும (நிகர ஏற்றுமதி) சேர்க்கப்படும். GNP – ல் கீழ்கண்ட ஐந்து வகையான முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகள் உள்ளன.

1. ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு. இவை மக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டவை. இதனை நுகர்வு (Consumption: C) என்கிறோம்.

2. மொத்த உள்நாட்டு மூலதனப் பொருட்களின் தனியார் முதலீடுகளில் இதில் மூலதனத் திரட்சி, வீடுகட்டுதல், உற்பத்திக்காக வைப்பில் உள்ள முடிந்த மற்றும் முடியாத பொருள்கள் ஆகியவை அடங்கும். இதனை முதலீடு (I) எனக் குறிக்கிறோம்.

3. அரசால் வாங்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகள் G எனக் குறிப்பிடப்படுகிறது.

4. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை (M) கழித்தால் கிடைக்கும் (X – M) நிகர ஏற்றுமதி. இது நேர்மறையாகவோ (+) எதிர்மறையாகவோ (–) இருக்கலாம்.

5. நிகர வருமானம் என்பது வெளிநாடுகளில் இருந்து பெற்ற காரணிகளின் வருவாய்க்கும் (கூலி, வட்டி, இலாபம்) நம் நாட்டில் குடியிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்கு கொடுக்கப்பட்ட காரணிகளின் வருவாய்க்கும் இடையே உள்ள வேறுபாடு (R – P) ஆகும். சந்தை விலையில் GNP என்பது C+ I +G+(X–M) + (R–P)

சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

### 2.4.3 நிகர தேசிய உற்பத்தி ( NNP at Market Prices )

நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். GNPயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும்.

NNP = GNP – தேய்மான கழிவு

தேய்மானத்தை மூலதன நுகர்வு கழிவு (Capital Consumption Allowance) என்றும் கூறலாம்.

### 2.4.4 காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at Factor Cost)

NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். காரணி செலவில் நிகர தேசிய வருவாயை பெறுவதற்கு, சந்தை விலையில் NNPயின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியை கழிக்க வேண்டும். மேலும் மானியங்களை கூட்ட வேண்டும்.

காரணிசெலவில் NNP= சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்

### 2.4.5 தனிநபர் வருமானம் (Personal Income):

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்க பெறும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். அவை அனைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனிநபர் வருமானம் ஆகும். தனிநபர் வருமானம் தேசியவருமானத்திற்கு சமமாக இருக்காது. ஏனெனில் மாற்று செலுத்துதல்கள் (Transfer Payment) தனிநபர் வருமானத்தோடு சேர்க்கப்படுகிறது. அரசிடம் இருந்து கிடைத்த ஓய்வூதியம் (Pension) தனிநபர் வருமானத்துடன் சேர்க்கப்படுகிறது. எனவே,

தேசிய வருவாயிலிருந்து பங்களிக்கப்படாத கார்பரேட் இலாபம் மற்றும் சமூக பாதுகாப்புத்திட்டங்களில் உழைப்பாளர்களின் பங்களிப்பு ஆகியவற்றை கழித்துவிட்டு, மாற்று செலுத்துதல்களை கூட்டி தனிநபர் வருமானம் கணக்கிடப்படுகிறது.

தனி நபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள்


### 2.4.6 செலவிடக்கூடிய வருமானம் (Disposable Income):

செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளைக் (Eg. Income Tax) கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம். இந்த வருமானம் தான் தனிநபர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும்.

செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முகவரிகள்

### 2.4.7 தலா வருமானம் (Per capita Income):

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக்கிடைப்பது தலா வருமானம்.



## தேசிய வருவாயை அளவிடும் முறைகள்

### 2.5.1 உற்பத்தி முறை (Product Method)

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும். ஒரு துறையின் வெளியீடு(Output) மற்றொரு துறையின் உள்ளீடு (Input) ஆகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர். இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

i) 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பயிரின் அதன் ஒரு ஹெக்டேருக்கான சராசரி (Per acre) உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

ii) ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

iii) இந்த 64 வகை பயிர்களின் மொத்த உற்பத்தி மதிப்பை எடுத்துக் கொண்டு விவசாயத் துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

iv) விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு, மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம், சரிசெய்தல் மற்றும் தேய்மானம் போன்ற செலவுகள் கழிக்கப்படுகின்றன.

இதுபோல, மற்ற துறைகளுக்கும் (உதாரணம் கால்நடை, காடுகள், மீன், சுரங்கம், தொழிற்சாலை) மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சந்தை விலையால் பெருக்கி உற்பத்தியின் மொத்த மதிப்பு பெறப்படுகிறது. மேற்குறிப்பிட்ட விவசாயம் சார்ந்த பிற துறைகளின் மொத்த மதிப்பில் இருந்து இடு பொருட்களின் செலவு, தேய்மானம் ஆகியவற்றைக் கழித்து நிகர மதிப்பு கணக்கிடப்படுகிறது.

இவ்வாறுதான், பிற துறைகளின் உற்பத்தி நிகர பங்களிப்பின் மதிப்பு தேசிய வருவாயில் எவ்வளவு இருக்கிறது என கணக்கிடப்படுகிறது.

### முன்னெச்சரிக்கைகள்

பின்தங்கிய மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் உற்பத்தி கையாளப்படுகிறது. இதில் பிழைகள் அதிகம் வர வாய்ப்புண்டு. இந்தியாவில் இம்முறை விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என்ற பிழைக்கு வழிவகுக்கும்.

2. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த பலவற்றை சந்தைப்படுத்தாமல் தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காக வைத்துக்கொள்ளலாம். அவற்றின் அளவையும் சந்தை விலையுடன் பெருக்கி மதிப்பைக் கண்டு தேசிய வருவாய் கணக்கில் சேர்க்க வேண்டும்.

3. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த (Durable) பொருள்களின் வாங்குதல் மற்றும் விற்றல் ஆகியவற்றின் பணமதிப்பை தேசிய வருவாயில் சேர்க்கக் கூடாது. உதாரணம். கைப்பேசி, கார், போன்ற பொருட்கள் இருமுறைகள் அல்லது அதற்கு மேல் விற்கப்படுகின்றன.

## 2.5.2. வருமான முறை (Income Method)

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம். வருமான முறை, காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

### கணக்கிடுவதன் நிலைகள்

1. மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

2. காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.

i) உழைப்பாளர் வருமானம் – கூலி மற்றும் சம்பளம், சமூக பாதுகாப்புக்கு முதலாளியின்

பங்கு, உற்பத்தி திறன் ஊக்கு (Fringe) ஊதியங்கள்.

ii) மூலதன வருமானம் – இலாபம், வட்டி, இலாப ஈவு மற்றும் இராயல்டி.

iii) கலப்பு வருமானம் – விவசாயம் மற்றும் பண்ணை சிறு தொழில் செய்வோர் மற்றும் பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்

3. உள்நாட்டு காரணி வருவாய்களுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிகர வருவாயை கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

$$Y = w + r + i + \pi + (R-P)$$

இதில்

W=கூலி, r = வாடகை, i = வட்டி, π = இலாபம் R = ஏற்றுமதி P = இறக்குமதி

மொத்த தேசிய வருவாய் கணக்கிடுவதில் பிற துறைகளான சிறு நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீடு, வாணிபம் மற்றும் போக்குவரத்து, கலை, வீட்டுவேலை செய்பவர்கள், பொது நிறுவனங்கள், வீட்டுச் சொத்து வருமானம் மற்றும் அயல்நாட்டு வாணிப பரிமாற்றம் போன்றவைகளின் வருமானம் மதிப்பிடப்படுகிறது.

செலுத்துநிலைக் கணக்கில் (Balance of Payments), வெளிநாடுகளில் இருந்து வந்த அல்லது வெளிநாடுகளுக்குச் சென்ற தொகை தொடர்பான புள்ளி விவரங்கள் பெறப்படுகின்றன.

### முன்னெச்சரிக்கைகள்

பின்தங்கிய மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் உற்பத்தி கையாளப்படுகிறது. இதில் பிழைகள் அதிகம் வர வாய்ப்புண்டு. இந்தியாவில் இம்முறை விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

2. ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது. உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என்ற பிழைக்கு வழிவகுக்கும்.

3. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த பலவற்றை சந்தைப்படுத்தாமல் தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காக வைத்துக்கொள்ளலாம். அவற்றின் அளவையும் சந்தை விலையுடன் பெருக்கி மதிப்பைக் கண்டு தேசிய வருவாய் கணக்கில் சேர்க்க வேண்டும்.

4. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த (Durable) பொருள்களின் வாங்குதல் மற்றும் விற்றல் ஆகியவற்றின் பணமதிப்பை தேசிய வருவாயில் சேர்க்கக் கூடாது. உதாரணம். கைப்பேசி, கார், போன்ற பொருட்கள் இருமுறைகள் அல்லது அதற்கு மேல் விற்கப்படுகின்றன.

### 2.5.3. செலவு முறை (Expenditure or outlay method):

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

மொத்தச் செலவும் கீழ்க்கண்ட முறையில் சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

$$GNP = C + I + G + (X-M)$$

C – தனியார் நுகர்வுச் செலவு

I – தனியார் முதலீட்டு செலவு

G – அரசின் கொள்முதல் செலவு

X – M = நிகர ஏற்றுமதி.

#### முன்னெச்சரிக்கைகள்

1. **ஏற்கனவே வாங்கிய பொருளை மீண்டும் வாங்குதல்:** ஏற்கனவே வாங்கப்பட்ட கார், இருசக்கர வாகனம், கைபேசி மற்றும் இயந்திரம் போன்ற பொருள்களை இரண்டாம் முறை வாங்கும் போது மேற்கொள்ளப்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

2. **பங்கு மற்றும் பத்திரங்கள் வாங்குதல் :** பழைய பங்கு, பத்திரங்களை இரண்டாம் நிலை அங்காடிகளில் வாங்கும் போது ஏற்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

3. **மாற்று செலுத்துநிலை:** அரசாங்கம் செய்யும் மாற்றுச் செலுத்துதல்களான முதியோர் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு செய்யும் செலவுகளை சேர்க்கக்கூடாது.

4. **இடைநிலை பொருள்களுக்கு செய்யும் செலவுகள்:** விவசாயிகள் விதை மற்றும் உரம் வாங்க செய்யும் செலவுகள், துணி தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் பருத்தி மற்றும் நூல்களுக்கு செய்யும் செலவுகள் போன்றவற்றை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது. முடிவடைந்த பொருட்களின் செலவுகளை மட்டுமே சேர்க்க வேண்டும்.

## 2.6 தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தேசிய வருவாய் பொருளாதாரத்தின் கணக்கு அல்லது "சமூகக் கணக்கு" (Social Accounting) எனச் சொல்லப்படுகிறது. தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம் பின்வருமாறு:

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது. மேலும் பொருள்கள் மற்றும் பணிகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன, பகிரப்படுகின்றன, செலவு செய்யப்படுகின்றன, சேமிக்கப்படுகின்றன, மற்றும் வரிவிதிக்கப்படுகின்றன போன்றவைகளை அறிய இயலும்.

2. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல கடைபிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.

3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.

4. குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.

5. துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

6. தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.


7. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.

8. பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை – GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை – GDP விகிதம், கடன் – GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.

## 2.7 தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள்

BU5TZG

தேசிய வருவாய் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்புக் இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும். இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்ட மாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு. எனவே ஒரு சரியான தேசிய வருமான மதிப்பீடு தருவதில் சிரமங்கள் இருக்கின்றன. சில சிரமங்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.




### 2.7.1 மாற்றுச் செலுத்துதல்கள் (Transfer Payments)

ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்றவற்றை அரசு அளிக்கிறது. இவைகள் அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவைகளை தேசிய வருவாயில் சேர்ப்பதில்லை. தேசியக்கடனுக்காக செலுத்தப்படும் வட்டியும் இது போன்றதே.

### 2.7.2 தேய்மானங்கள் கொடுப்பனவு மதிப்பிடுவதில் சிக்கல் (Difficulties in assessing depreciation allowance)

தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. இவைகளை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

### 2.7.3 பணம் செலுத்தப்படாத சேவைகள் (Unpaid services)

இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். உணவு தயாரித்தல், தையல், பழுது பார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற வேலைகளையும் எந்தவித பண வருமானமும் இன்றியும் நட்பு, பாசம், அன்பு, மரியாதை போன்ற பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

### 2.7.4 சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் (Income from illegal activities)

சூதாட்டம், கடத்தல் மற்றும் சட்ட விரோதமாக மதுவை தயாரித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் தேசியவருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை. இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

### 2.7.5 சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் (Production for self–consumption and changing price)

விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில்

விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

உற்பத்தி முறையில் தேசிய வருவாய் கணக்கிடுதல் என்பது நடப்பு சந்தை விலையில் முடிவடைந்த பொருள்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும். ஆனால் விலைகள் ஒரே மாதிரி நிலையாக இருப்பது இல்லை. இந்த பிரச்சனைக்கு தீர்வுகான, பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணை பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை தேசியவருவாயை கணக்கிடுகின்றனர்.

### 2.7.6 மூலதன இலாபம் (Capital Gains)

மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது. தேசிய வருவாய் கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவது இல்லை.

### 2.7.7 புள்ளி விவர சிக்கல் (Statistical Problems)

புள்ளிவிவரங்களை சேகரிப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை, புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை தேசிய வருவாய் கணக்கிடுதலில் பிரச்சனைகளைத் தரலாம்.

1. விவசாயத்துறையில் உற்பத்தி அளவை கணக்கிடுவது சிரமம். மேலும் கால்நடைத்துறையின் உற்பத்தி போன்றவை பற்றிய புள்ளிவிவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் கிடைக்காது.
2. பல்வேறு மொழி மற்றும் கலாச்சாரம் போன்ற காரணத்தினாலும் புள்ளிவிவரங்களை மதிப்பிடுவதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
3. அரசு அலுவலர்கள் – மக்கள் உறவு நம் நாட்டில் சுமூகமாக இல்லாத நிலையில் புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் பிரச்சனைகள் வருகின்றன. மக்கள் உண்மையான புள்ளிவிவரங்கள் தருவதில்லை.
4. புள்ளி விவரங்களை சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர்.

ஆகையினால் தேசிய வருவாய் மதிப்பீட்டில் துல்லிய தன்மை இல்லாமலும், புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லாமலும் இருக்கின்றன. 10 சதவிகிதம் அதிகமாகவோ அல்லது குறைத்தோ மதிப்பிடப்படுகின்றது. இத்தகைய காரணங்களினால் இந்தியாவின் GDPயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு ஏறக்குறைய 2 டிரில்லியன் US$ யிலிருந்து 5 டிரில்லியன் US$ வரை வேறுபடுகிறது.

# அத்தியாயம் 3

# வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

## 3.1 அறிமுகம்

பல நாடுகள் பொருளாதாரப் பிரச்சனைகளைச் சந்தித்துள்ளதை பொருளாதார வரலாறு கண்டுள்ளது. பல்வேறு பிரச்சனைகளுள் வேலைவாய்ப்பின்மை என்பது ஒரு அபாயகரமான ஒன்றாக இருக்கிறது. வேலைவாய்ப்புக்கும் வருமானத்திற்கும் உள்ள உறவைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களும் J.M கீன்சும் (J.M. Keynes) விளக்கியுள்ளனர். பிரென்ஞ் பொருளியல் அறிஞரான J.B. சேயின் (Say) சந்தை விதியின் (Law of Markets) மேல் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தனர். 20ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் J.M. கீன்ஸ்.

## 3.2 முழு வேலை வாய்ப்பின் பொருள்

நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள் மற்றும், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம். அதாவது முழுவேலை நிலை என்பது வேலை செய்ய விருப்பமும் திறமையும் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக கிடைக்கும் வேலை நிலையை குறிக்கும். கீன்ஸின் கூற்றுபடி முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை (Involuntary Unemployment) இல்லாமல் இருப்பது ஆகும். உதாரணம்: சில செல்வந்தர்களின் குழந்தைகள் வேலைக்கு செல்ல விரும்புவது இல்லை (Voluntary Unemployment ).

லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்கிறார்.

உலகில் ஒவ்வொரு நாடும் முழு வேலை நிலையை அடைவதை குறிக்கோளாக கொண்டிருக்கின்றன. இதற்காக தங்கள் நாட்டில் இருக்கும் வளங்களை முழுமையாக பயன்படுத்தி உத்தம அளவு உற்பத்தியை அடைய முயல்கின்றன. ஆனால் நடைமுறையில் முழு வேலைவாய்ப்பு என்பது நாட்டின் உழைப்பாளர்களை முழுமையாக பயன்படுவது ஆகும்.

## 3.3 வேலையின்மையின் வகைகள் (Types Of Unemployment)

வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.




இந்தியாவில் வேலையின்மை பிரச்சனையைச் சமாளிக்க கொள்கைகள் உருவாக்கும் போது வேலையின்மையின் வகைகளையும் தன்மைகளையும் அறிய வேண்டும். இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் (Underemployment) காணப்படுகின்றன கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது. நகர்புறங்களில் பிறழ்ச்சி வேலையின்மை, அமைப்புசார் வேலையின்மை மற்றும் திறந்த வேலையின்மை நிலவுகிறது. நகர்மயமாதல் காரணமாக கிராமப்புற வேலையாட்கள் நகர்ப்புறங்களை நோக்கி செல்கின்றனர். இவ்வாறு கிராமபுற மக்கள் நகர்ந்து செல்வதால் நகர்புறங்களில் வேலையின்மை அதிகரிக்கிறது.

### வேலையின்மையின் வகைகள்

**வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ அல்லது பிறழ்ச்சியாகவோ இருக்கலாம். ஆனால் வளர்கின்ற நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதால் அமைப்புசார்ந்த வேலையின்மை அதிகமாக இருக்கும். கீழ்கண்டவை வேலையின்மையின் வகைகள் ஆகும்.**



### 1. வாணிபச் சூழல் வேலையின்மை (Cyclical Unemployment)

கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை (Cyclical Unemployment) என்று பெயர். வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாத போது நிகழ்வதாகும். அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் இந்த சுழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.

### 2. பருவகால வேலையின்மை (Seasonal Unemployment)

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவகால வேலையின்மை தோன்றும், உதாரணம், ஐஸ்கீரிம், விடுமுறைகால சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்பு குறையலாம்.

### 3. தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை (Temporary Unemployment or Frictional Unemployment)

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

### 4. கற்றோர் வேலையின்மை (Educated Unemployment)

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

### 5. தொழில் நுட்ப வேலையின்மை (Technical Unemployment)

புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். புதியன

கண்டுபிடித்தலும் புதிய கருத்துக்களும் வேலைவாய்ப்பினை உருவாக்கும். ஆனால் உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

### 6. அமைப்புசார் வேலையின்மை (Structural Unemployment)

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (Eg. Type Machine, Taperecordeas, Radios, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்கு காரணமாகிறது. உதாரணமாக, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை குறைந்துள்ளது. இந்தியாவில் மூலதன பற்றாக்குறையால் மக்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

### 7. மறைமுக வேலையின்மை (Disguised Unemployment)



தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். (உதாரணம் – விவசாயத்துறை). இவ்வேலைகளில் சிலர் வேலையைவிட்டு விலகினாலும், உற்பத்தி பாதிக்காது. உற்பத்தியில் அவர்களின் பங்கு குறைவாக இருக்கும். வேலையில்லாததாலேயே, தெரிந்தும் அதிகமானோர் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். இத்தகைய வேலையின்மையால் உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்திதிறன் பூஜ்யமாகவோ, குறைவாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கும்.

## 3.4 வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாடு (Classical Theory of Employment)

வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடு எந்த ஒரு தனிகோட்பாட்டையும் பெற்று இருக்கவில்லை. நாட்டில் வருமானம் மற்றும் வேலை பற்றி பன்முக பார்வையில் வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடுகள் இருந்தன. ஆடம் ஸ்மித் என்ற பொருளியல் வல்லுநர் 1776ம் ஆண்டு "நாடுகளின் செல்வம் பற்றிய இயல்பு மற்றும் காரணங்கள் அடங்கிய விசாரணை" என்ற புத்தகத்தை வெளியிட்டார். பின்னர் டேவிட் ரிக்கார்டோ, J.S. மில், J.B. சே மற்றும் A.C பிகு ஆகியோரால் தொன்மைக் கோட்பாடு வளர்ச்சி பெற்றது.

ஒரு பொருளாதாரம் நீண்டகாலத்தில் பணவீக்கம் இன்றி முழு வேலைநிலையுடன் இயங்கும் என்று தொன்மை பொருளியல் அறிஞர்கள் அனுமானித்தனர். மேலும் பொருளாதாரத்தில் கூலியும் விலையும் நெகிழ்ச்சி உடையதாக இருக்கும் எனவும், சந்தையில் போட்டி நிலவும் எனவும், அரசு தலையிடாக் கொள்கையை (Laissez – faire economy) பின்பற்றும் என்றும் நம்பினர்.

## 3.4.1 சேயின் சந்தை விதி (Say's Law of Market)



J.B. சே


வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் முக்கிய அங்கமாக சேயின் சந்தை விதி திகழ்கிறது. பிரெஞ்ச் (French) பொருளியலறிஞரான J.B. சே (1776 – 1832) ஒரு தொழிலதிபர் ஆவர். ஆடம்ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோ போன்றவர்களின் எழுத்துக்களினால் கவரப்பட்டார். J.B. சேயின் கருத்துப்படி, "அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும் "(Supply Creates its own demand).சேயின் கருத்துப்படி, பொருளாதாரத்தில், நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்ததற்கு உற்பத்திக்காரணிகளுக்கு ஊதியத்தை அளிக்கப்படுகின்றனது. அந்த ஊதியத்தைக் கொண்டு குடும்பங்கள், நிறுவனங்கள் செய்த உற்பத்தி செய்த பொருட்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன. ஆகவே ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதற்கான தேவையை அங்காடி மதிப்பில் தானே உருவாக்கும் என்று J.B. சே கருதினார்,. ஒரு உழைப்பாளி பெறும் ஊதியத்தை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதால், உற்பத்தி செய்த அனைத்தும் விற்கப்பட்டுவிடும் என்று சேயின் சந்தை விதி கூறுகிறது. சேயின் கருத்துப்படி, ஒரு பொருளதாரத்தில் மொத்த உற்பத்தியும் மொத்த வருவாயும் சமமாக இருக்கும்.

சுருக்கமாக, வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின்படி "உற்பத்தியின் மூலம் ஒரு நபர் அவர் வருவாயை ஈட்டுகிறார், அது மற்றவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குவதற்கு செலவிடப்படுகிறது. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி மொத்த வருவாய்க்கு சமமாக இருக்கும்".




**சேயின் அங்காடி விதியில் முந்தைய பிந்தைய கருத்துக்கள்**

அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும் அல்லது தொகு முதலீடு, தொகு சேமிப்புக்கு சமம் என்ற விதிகள் பிந்தைய கருத்துக்கு உகந்ததாக இருக்கும். இது சாதாரணமாக கணக்கியல் நோக்கிற்கு மட்டும் அமையும். சேயின் அங்காடி விதி, தொகு அளிப்பு அதாவது உற்பத்தியாளர் உற்பத்தி செய்யும் மொத்த உற்பத்தி அதை வாங்குபவரின் தொகு தேவைக்கு சமம் என்பது முந்தைய கருத்துக்கு உகந்ததாகும்.




### சேயின் சந்தை விதியின் எடுகோள்கள்

சேயின் சந்தைவிதி கீழ்கண்ட எடுகோள்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

1. ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.
2. முழு வேலை நிலை நிலவும்.
3. மக்கள் அவர்களின் சுய விருப்பங்களால் உந்தப்படுகிறார்கள். அவர்களின் விருப்பங்கள் பொருளாதார முடிவுகளை நிர்ணயிக்கின்றன.
4. சந்தைச் சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன. ஒரு பொருளாதாரம் தானே சரிசெய்து கொள்ளும் சூழல் பெற்று முழு வேலைநிலை சமநிலை அடைய அரசின் தலையிடாக் கொள்கை அவசியமாக உள்ளது.
5. உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்.
6. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.
7. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.
8. இது நீண்ட கால பகுத்தாய்வை அடிப்படையாக கொண்டது.
9. அ தி க உ ற் ப த் தி க் கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை
10. பயன்படுத்தப்படாத வளங்கள் இருந்தால், முழு வேலைவாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்திக்காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருப்பார்கள் என்ற நிபந்தனை இவ்விதியில் இருக்கும்.
11. விலைக் கருவி (Price mechanism) தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
12. வட்டிவீத நெகிழ்வுத் தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

### சே – விதியின் விளைவுகள்

1. அதிக உற்பத்திகோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.
2. பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழுவேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்தி காரணிகள் அதன் உற்பத்தி திறனுக்கு இணையாகும் வரை ஏற்றும் கொள்ளும்.
3. விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
4. வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும் .

5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்க மாட்டார்கள்.

### சேயின் விதி பற்றிய திறனாய்வு (Criticism of Say's Law)

கீழ்கண்டவை J.B. சேயின் சந்தை விதியின் திறனாய்வு ஆகும்.

1. கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.

2. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.

3. தனிநபர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.


4. சேயின் சந்தை விதி, அளிப்பு தன் தேவை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது, ஆனால் கீன்ஸீன் கூற்றுப்படி அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.

5. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை (Underemployment) உள்ளதால், முழு வேலை வாய்ப்புக்குச் சாத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.

6. அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் எனக் கீன்ஸ் கருதுகிறார்.

## 3.5 வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸின் கோட்பாடு (Keynes' Theory of Employment and Income)

J.M. கீன்ஸ்



நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில், கீன்ஸ் எழுதிய புத்தகமான "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுகோட்பாடு"

3C82HV

ஒரு திருப்புமுனையாக இருக்கிறது. அதிக தாக்கத்தை ஏற்படுத்திய இந்த நூல் 1936ல் வெளியிடப்பட்டது.

தொன்மைப் பொருளதார அறிஞர்கள் ஒரு முதலாளித்துவ பொருளதார அமைப்பில் சந்தை சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும் என நம்பினர். இதற்கு எதிர்மாறான கருத்தை கீன்ஸ் கொண்டிருந்தார், எனவே அதில் உள்ள குறைகளை களைய தன்னுடைய புதிய

வேலைவாய்ப்பு கோட்பாட்டை உருவாக்கினார்.

J.M. கீன்ஸ் 20ஆம் நூற்றாண்டில் ஒரு தாக்கத்தை உருவாக்கிய ஒரு பொருளியல் அறிஞர். 1883ல் Cambridgeல் இவர் பிறந்தார். அவர் பொருளாதார அறிஞராகப் பணியாற்றினார். அத்துடன் ஒரு குடிமைப் பணியாளராகவும் (Civil Servant), Bank of Englandல் இயக்குநராகவும் Bretton woods மாநாட்டில் ஒரு முடிவை எடுப்பதற்கான ஒரு குழுவுக்குத் தலைவராகவும் இருந்தார். அவருடைய கருத்தின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரக் கருத்துக்கள் கீன்ஸியன் பொருளாதாரம் என அழைக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்திலும் அதிக தாக்கத்தை பேரியல் பொருளியலில் ஏற்படுத்துகிறது.

கீன்ஸின் கோட்பாடு, முழுவேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் (Underemployment) வாய்ப்பு இருப்பதை சுட்டிகாட்டுகிறது. கீன்ஸின் கோட்பாடு ஒரு பொதுக்கோட்பாடாகவே திகழ்ந்தது. இது எல்லாவகைச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

கீன்ஸின் கருத்துக்கள் குறுகிய காலத்தை அடிப்படையாக கொண்டு இருந்தன. அவரது கருத்துப்படி, வேலை வாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

## 3.6 விளைவுத் தேவை (Effective Demand)

வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸ் கோட்பாட்டின் ஆரம்பப் புள்ளியே "விளைவுத் தேவை" கருத்தாகும். விளைவுத்தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். தொழில் முயல்வோர்கள், வட்டி, வாடகை, கூலி மற்றும் இலாபம் போன்றவற்றை பணமாகவே கொடுப்பார்கள்; எனவே விளைவுத் தேவை தேசிய வருவாய்க்குச் சமமாக இருக்கும்.

மொத்த விளைவுத் தேவை (Aggregate effective demand) அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பின் அளவிலும் ஏற்றம் வரும். மொத்த விளைவுத் தேவை குறையும் போது வேலையின்மை சிக்கல் தோன்றும். ஆகவே நாட்டின் மொத்த வேலை வாய்ப்பு, தொகு தேவையின் உதவியுடன் தீர்மானிக்கப்படுகிறது.

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி, பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வு மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும். எனவே மொத்தச் செலவு, தேசிய உற்பத்திக்கும், தேசிய வருவாய்க்கும் சமமாக இருக்கும். ஒரு நாட்டில் உற்பத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு விளைவு தேவையின் அளவைப் பொறுத்து அமைகிறது. விளைவுத் தேவையின் அளவு தொகு அளிப்பையும் தொகு தேவையையும் சார்ந்து உள்ளது.

ED = Y = C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு




"விளைவுத் தேவை" ஒரு பொருளதாரத்தின் வேலைநிலையை நிர்ணயிக்கிறது. விளைவுத் தேவை அதிகரிக்கும் போது, வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். மாறாக, விளைவுத்தேவை குறைந்தால் வேலைவாய்ப்பும் குறையும். நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவு ஆகிய இரண்டு காரணிகளும் விளைவுத் தேவையின் அளவை நிர்ணயிக்கின்றன. தொகுத் தேவையில், நுகர்வுச் சார்பை மக்களின் வருமானமும் இறுதிநிலை நுகர்வு விருப்பமும் (Marginal Propensity to Consume: MPC) நிர்ணியிக்கின்றன. கீன்ஸின் கூற்றுப்படி, வருமானம் கூடினால் நுகர்வும் கூடும். ஆனால் வருமானம் கூடுகின்ற அதே விகிதத்தில் நுகர்வு விகிதம் அதிகரிக்காது.

முதலீட்டு அளவை, வட்டிவீதம் மற்றும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்க திறன் (Marginal Efficiency of Capital:MEC) ஆகிய இருகாரணிகளும் நிர்ணயிக்கின்றன. வட்டி வீதமானது, பண அளிப்பு மற்றும் பணத்தின் ரொக்க இருப்பு விருப்பம் ஆகிய இரண்டையும் சார்ந்துள்ளது. ரொக்க இருப்பு விருப்பத்திற்கு கீன்ஸ் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். ரொக்க இருப்பு விருப்பம் மூன்று நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. அவை: பேரநோக்கம், முன்னெச்சரிக்கை நோக்கம் மற்றும் ஊக நோக்கம் ஆகும். மூலதன சொத்திலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் மூலதனத்தின் அளிப்பு விலை ஆகிய இரண்டு காரணிகளையும் MEC சார்ந்து உள்ளது.

### 3.6.1 தொகு தேவைச் சார்பு (Aggregate Demand Function: ADF)

கீன்ஸ் கோட்பாட்டின் படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை. அதாவது, வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாய் எனலாம்.


தொகுத் தேவை கீழ்க்காணும் நான்கு பகுதிகளைக் கொண்டது.

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி–இறக்குமதி (Export – Import)

விரும்புகிற அல்லது திட்டமிடுகிற தேவை (செலவு) என்பது குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் வெளிநாட்டிலிருந்து வாங்குவோர் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையே உள்ள வித்தியாசம்) ஆகியோர் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்காக செய்கின்ற செலவு தொகையாகும். விரும்புகிற செலவு என்பது மொத்தச் செலவு (தேவை) என்றும் அழைக்கப்படுகிறது. இதனை கீழ்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் குறிப்பிடலாம்.

$$AD = C + I + G + (X - M)$$

கீழ்கண்ட வரைபடம் 3.1. தொகுத் தேவைக்கும், வேலைவாய்ப்புக்கும் உள்ள தொடர்பை காட்டுகிறது.




வரைபடம் .3.1

வேலைவாய்ப்பு அதிகரித்தல் மற்றும் குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்ப மொத்த தேவை கூடும் அல்லது குறையும். வரைபடத்தில் முதலில் மொத்த தேவை வளைகோடு அதிகரிக்கும் விகிதத்தில் அதிகரிக்கின்றது. பின்பு இவ்வளைகோடு குறையும் விகிதத்தில் அதிகரிக்கிறது. அதாவது வேலைவாய்ப்பு அதிகரித்தால் வருமானம் அதிகரிக்கும். ஆனால் வருமானம் அதிகரித்த வீதத்தில் பொருளாதாரத்தில் செலவு அதிகரிப்பது இல்லை. மாறாக, குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது என்பதை வரைபடம் விளக்குகிறது.

### 3.6.2 தொகு அளிப்புச் சார்பு (Aggregate Supply Function: ASF)

தொகு அளிப்புச் சார்பு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பை குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும். எனவே தொகு அளிப்பு என்பது தேசிய உற்பத்தியின் மதிப்பு அல்லது தேசிய வருமானத்திற்குச் சமமாக இருக்கும். தொகு அளிப்புச் சார்பு வேலைவாய்ப்பு அளவோடு சேர்ந்து அதிகரிக்கும்.

தொகு அளிப்பு என்பது தேவையான உற்பத்தியை நாட்டில் அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தேவையான உழைப்பாளர்கள் எண்ணிக்கை மற்றும் பிற பொருட்கள் பயன்படுத்துவதை குறிக்கும். உற்பத்திக்காக முதலாளிகள், உழைப்பாளர்கள் இடு பொருட்கள் போன்ற பலவற்றை விலைகொடுத்து வேலைக்கு அமர்த்துவார்கள். ஆகவே உற்பத்தியில் செலவும் அடங்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தில், நிறுவனத்தின் உற்பத்திச் செலவைவிட, சரக்குகளை விற்பதால் கிடைக்கும் வருவாய் அதிகமாக இருந்தால், நிறுவனங்கள், மேலும் அதிகமான உழைப்பாளர்களையும் மற்ற இடுபொருள்களையும் வாங்குவதற்கு முனைவார்கள்.

தொகு அளிப்பு விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பையும் இடுபொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்ற பிறகு கிடைக்கும், 'எதிர்பார்க்கப்படும் (வருமானம்) மொத்த தொகை' ஆகும். இங்கு "விலை" என்பது விற்பனையால் கிடைத்த வருவாயை குறிப்பிடுகிறது.

#### தொகு அளிப்பின் கூறுகள்:

தொகு அளிப்பில் கீழ்கண்ட நான்கு பகுதிகள் உள்ளன.

1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (C)
2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (S)

3. நிகர வரி வசூல் (T). அரசுபெற்ற மொத்த வரிவருமானத்தில் இருந்து மாற்றுச் செலுத்தல்கள் (Transfer Payments), ஓய்வூதியம், மானியம், அரசு செலுத்தவேண்டிய வட்டி ஆகியவற்றைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகையாகும். மற்றும்


4. தனிநபர் (விரும்பப்படுகிற) வெளிநாட்டவர்க்கு (உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்துதல்கள் மற்றும் உதவித்தொகை. இது $R_f$ (வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை) என குறிக்கப்படுகிறது.

**மொத்த அளிப்பு = $C + S + T + R_f$**

ஆக, ஒரு பொருளதாரத்தில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம்.

கீழ்கண்ட வரைபடம், தொகு அளிப்பை கோட்டை விளக்குகிறது. வரைபடத்தில், நிலையான பணக்கூலி மற்றும் மாறும் கூலி நிலவும் என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு அளிப்புக் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

**மொத்த அளிப்பு வளைகோடு**




வரைபடம் 3.2

வரைபடம் வேலைவாய்ப்புக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும் மற்றொன்று ($Z_1$) வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன. Z கோடு நேர்கோடாகவும், $Z_1$ கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளைகோடாகவும் இருக்கிறது $ON_f$ அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது. எனவே, $N_f$ க்குப் பின்னர், தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக, நெகிழ்வற்றதாக உள்ளது.

தொகு அளிப்பு கோட்டின் சாய்வு (Slope) என்பது வேலைவாய்ப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பைப் சார்ந்து அமைந்துள்ளது. மூலதன இருப்பு மாறாமல் இருக்கும்போது அதிக உழைப்பாளர்களை பணியிலமர்த்துவதால் குறைந்துசெல் இறுதிநிலை விளைவு செயல்படுகிறது. பொதுவாக தொகு அளிப்பு வளைகோடு $Z_1$ போன்று இருக்கும். ஆகவே விலைக்கும் கூலிக்கும் உள்ள தொடர்பை சார்ந்துதான் தொகு அளிப்பு இருக்கும். பொருளின் விலை அதிகமாக இருந்து கூலிகுறைவாக இருந்தால், உற்பத்தியாளர்கள் கூடுதாலாக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். மாறாக பொருட்களின் விலை குறைவாக இருந்து கூலி அதிகமானால், முதலீடு குறையும். இதனால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனும் குறையும். எனவே பொருளாதார நடவடிக்கையை தீர்மானிக்கும் காரணிகளில் தொகு அளிப்பு முக்கியப்பங்கு வகிக்கிறது.


### 3.6.3 ADF மற்றும் ASF – ன் சமநிலை (Equilibrium between ADF and ASF)

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன. மேலும் நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.

NQRNPC

கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை:

1. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை
2. சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை



வரைபடம்.3.3

இந்த அத்தியாயத்தில் மொத்த தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை மட்டும் விளக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 3.3. – ல் விளைவு தேவை கருத்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது. இப்புள்ளியில் வேலை வாய்ப்பு $N_0$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு $N_1R_1$ ஆக இருக்கும். ஆனால் $M_1N_1$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும். எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1$ $R_1$ ஆகும். இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர். சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்தபிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர். ஏனெனில் $N_0$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுத் தேவை, தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும். எனவே முதலாளித்துவ பொருளாதாரம் அல்லது திறந்த வெளிசந்தை பொருளாதாரத்தில் (கீன்ஸ் கோட்பாட்டின்படி) உற்பத்தி சமநிலையை தீர்மானிப்பத்தில் தொகுத் தேவை கருத்து அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின் மைய கருத்து என்னவெனில், சமநிலை வேலைவாய்ப்பு என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவேலை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை. வரைபடத்தில் $N_0$ மற்றும் $N_f$ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது. ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்துமுக்கியப்பங்கு வகிக்கிறது.

## 3.7

## தொன்மையியம் மற்றும் கீன்ஸியம் – ஓர் ஒப்பீடு (Comparison of Classicism and Keynesianism)


| வரிசை எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்குத் மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அ ர சு த் த லை லை யீ டு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | எல்லா சூழநிலைக்கும் முழு வேலைவாய்ப்பு மற்றும் குறைமுழு வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது |
| 11. | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

# அத்தியாயம் 4

# நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

## நுகர்வுச் சார்பு

### 4.2.1 நுகர்வுச் சார்பின் பொருள்




நுகர்வுச் சார்பு

வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு நாட்டம்" என்கிறோம். இது "மொத்த நுகர்வு மற்றும் மொத்த நாட்டு வருமானம் ஆகிய இரு ஒட்டுமொத்தத்திற்கிடேயேயான சார்பு தொடர்பாகும்"

இதனை $C = f(Y)$ எனலாம்.

இதில் C = நுகர்வு

Y = வருமானம்

f = சார்பு

எனவே நுகர்வுச் சார்பு நுகர்வு மற்றும் வருமானத்திற்கிடையேயான சார்புத் தொடர்பை விளக்குகிறது. C = சார்பு மாறி, y = சாரா மாறியாகவும் உள்ளது.

இங்கு வருவாய் மற்றும் நுகர்வு மட்டுமே பேசப்படுகின்றன. இவற்றைப் பாதிக்கக்கூடிய எத்தனையோ மாறிகள் இருக்கலாம். அவை அனைத்திலும் மாற்றம் இல்லை என அனுமானித்தே இந்த சார்பு விளக்கப்படுகிறது.

நுகர்வுச் சார்பு அட்டவணை பல்வேறு வருமான நிலைகளில் உள்ள பல்வேறு நுகர்வுச் செலவினைக் காட்டுவதாகும். கீழ்க்காணும் ஒரு கற்பனை அட்டவணை நுகர்வுச் சார்பை விளக்குகிறது.

**அட்டவணை 1 : வருமானம் – நுகர்வு அட்டவணை (₹ கோடிகளில்)**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S |
|---|---|---|
| 0 | 20 | -20 |
| 60 | 70 | -10 |
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |
| 300 | 270 | 30 |
| 360 | 320 | 40 |

$C = 100 + 0.8Y$
என்று கொள்ளும் போது MPC = 0.8

வருமானம் பூஜ்யம் (Y = 0) ஆனாலும் நுகர்வுச் செலவு 100 ஆக (C = 100) இருக்கும். வருமானம் 100 (Y=100) எனில் நுகர்வுச் செலவு 180 (C=180) ஆகவும். வருமானம் 200 (Y = 200) எனில் நுகர்வுச் செலவு 260 (C = 260) ஆகவும், வருமானம் 300 (Y = 300) எனில் நுகர்வுச் செலவு 340 (C = 340) ஆகவும் இருக்கும்.

Y = 300 எனில்
C = 340 ஆக இருக்கும் போது

$$\left(MPC = \frac{\Delta c}{\Delta y} = 0.8\right)$$

கணிதரீதியாக

$C = a + b\,Y$ or $C = 20 + 0.8Y$

இதில் $a > 0$ மற்றும் $b < 1$


C = நுகர்வு, a = 20 = நிலையானது

Y = வருமானம்

b = MPC (இறுதிநிலை நுகர்வு நாட்டம்)

$= 0.8 = \frac{\Delta c}{\Delta y}$

தரப்பட்டுள்ள அட்டவணையில் நுகர்வு செலவு அதிகரிப்பதானது என்பது அதிகரிக்கும் வருமானத்தைச் சார்ந்து உள்ளது. இங்கு வருமானம் பூஜ்யமாக இருந்தாலும் மக்கள் ஏற்கனவே உள்ள சேமிப்பை சாப்பிடுவதற்கு செலவு செய்யவர் அப்பொழுதுதான் உயிர்வாழ முடியும் ( தன்னாட்சி நுகர்வு).




வரைபடம் 4.1


இந்த வரைபடத்தில் வருமானம் M = 120 ஆக இருக்கும் போது நுகர்வும் (C) 120 ஆக உள்ளது (B – என்னும் புள்ளியில்).

வருவாய் Y = 180 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு C = 170 ஆக உயர்கிறது. (S என்னும் புள்ளியில்) Y 360 ஆக உயர்ந்தால், C = 320, S = 40

மேற்காண் வரைபடத்தில் வருமானம் படுகிடைக் கோட்டிலும், நுகர்வு செங்குத்துக் கோட்டிலும் விளக்கப்படுகிறது. 45–டிகிரி கோட்டின் எல்லா புள்ளியிலும் நுகர்வும் வருமானமும் சமமாக உள்ளது. வருமான மாற்றத்திற்கு சமமான அளவில் நுகர்வும் மாறும் என்ற எடுகோளைக் கொண்டுள்ளதால் நேர்கோட்டு நுகர்வுச் சார்பாக உள்ளது.

நுகர்வுச் சார்பானது நுகர்வுக்காக செலவிடும் தொகையை மட்டும் அளவிடாமல், சேமிக்கப்பட்ட தொகையை யும் சேர்த்து மதிப்பிடுகிறது. $45^{o}$ கோடு என்பது பூஜ்ய சேமிப்பையையும், C என்னும் கோடு நுகர்வு மற்றும் சேமிப்பின் பகிர்வைக் காட்டுகிறது.

### 4.2.2 முக்கிய கருத்துருக்கள்




(i) சராசரி நுகர்வு நாட்டம் $= \frac{c}{y} = \frac{\text{நுகர்வு}}{\text{வருவாய்}}$

(ii) இறுதிநிலை நுகர்வு நாட்டம்

$= \frac{\Delta c}{\Delta y} = \frac{\text{நுகர்வு மாற்றம்}}{\text{வருவாய் மாற்றம்}}$

(iii) சராசரி சேமிப்பு நாட்டம் $= \frac{s}{y} = \frac{\text{சேமிப்பு}}{\text{வருவாய்}}$

(iv) இறுதிநிலை சேமிப்பு நாட்டம்

$= \frac{\Delta s}{\Delta y} = \frac{\text{சேமிப்பு மாற்றம்}}{\text{வருவாய் மாற்றம்}}$

### (1) சராசரி நுகர்வு நாட்டம்

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணிதரீதியாக

$$APC = \frac{C}{Y}$$

இங்கு

C – நுகர்வு

Y– வருமானம்

### (2) இறுதிநிலை நுகர்வு நாட்டம்

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது. கணித ரீதியாக

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

இங்கு

$\Delta C$ = நுகர்வு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

MPC – நேர்மறை எண் ஆனால் ஒன்றுக்கும் குறைவானது.

$$0 < \frac{\Delta C}{\Delta Y} < 1$$

### (3) சராசரி சேமிப்பு நாட்டம் (APS)

வருமானத்திற்கும், சேமிப்பிற்குமிடையேயான வீதமே சேமிப்பு நாட்டம் எனப்படும். சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்த சேமிப்பை மொத்த வருவாய் வகுத்தால் கிடைக்கக்கூடியதாகும். வேறுவகையில் கூறினால் மொத்த வருவாய்க்கும், மொத்த சேமிப்பிற்கிடையேயான வீதமாகும். கணித ரீதியாக

$$APS = \frac{S}{Y}$$

இங்கு

S = சேமிப்பு

Y = வருமானம்

### (4) இறுதிநிலை சேமிப்பு நாட்டம்

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும்.

இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை, வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும். கணித ரீதியாக

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

இங்கு

$\Delta S$ = சேமிப்பு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

மேலும் MPC+MPS=1

MPS = 1– MPC மற்றும் MPC = 1 – MPS


பொதுவாக சராசரி நுகர்வு நாட்டம் சதவீதமாகவும், இறுதிநிலை நுகர்வு நாட்டம் பின்னமாகவும் இருக்கும்.

**அட்டவணை. 2 APC, MPC, APS மற்றும் MPS யை கணக்கிடுதல்**

| வருமானம் Y | நுகர்வு C | APC % C/Y | APS % S/Y | MPC ΔC/ΔY | MPS ΔS/ΔY |
|---|---|---|---|---|---|
| 120 | 120 | (120/120)100 = 100 | (0/120)0 | - | - |
| 180 | 170 | (170/180)100 = 94 | (10/180)100 | 50/60 = 0.83 | 0.17 |

### 4.2.3 கீன்ஸின் நுகர்வு பற்றிய உளவியல் விதி (Keyne's Psychological Law of Consumption)

கீன்ஸ் நுகர்வு பற்றிய உளவியல் (மனஇயல்) விதி ஒன்றை முன்மொழிந்தார். அதனடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். "உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம் மற்றும் விரிவான உண்மை அகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்; ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது". இந்த விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.




#### அனுமானங்கள்

கீன்ஸின் விதி கீழ்காணும் அனுமானங்களை உள்ளடக்கியது.

#### i. மற்றவை மாறாது

வருமான பகிர்வு, சுவை, பழக்கவழக்கம், சமூக காரணிகள், விலை மாற்றம், மக்கள் தொகை பெருக்கம் போன்றவை மாறாமல் நிலையாக உள்ளது என்ற அனுமானத்தின் அடிப்படையில் நுகர்வு வருமானத்தை மட்டும் சார்ந்ததாகும்.

#### 2. சுமூகமான சூழல் நிலவுகிறது

இந்த விதி நாட்டில் இயல்பான நிலை நிலவும்போது மட்டும் பொருத்தமானதாக அமையும். அபரிமிதமான மற்றும் அசாதாராண சூழ்நிலைகளான போர், புரட்சி, மிக வேக பணவீக்கம் போன்றவற்றின் போது இந்த விதி செயல்படாது. மக்கள் அதிகரித்த மொத்த பணத்தையும் நுகர்விற்கே செலவிடுவர்.

#### 3. முதலாளித்துவ பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது

அரசு தலையிடாது. மக்கள் சுதந்திரமாக நுகர்வு பற்றிய முடிவினை எடுப்பார்கள். நாடு செல்வமிக்கது; முதலாளித்துவம் நிலவுகிறது.

#### விதியின் கருத்துக்கள்

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.

(1) **வருமானம் உயரும் போது, நுகர்வு செலவும் அதிகரிக்கும்**. ஆனால் சிறிய அளவாக இருக்கும். காரணம் வருமனம் அதிகரிக்கும்

போது, பகுதி பகுதியாக நம் விருப்பமும் நிறைவேறும், ஆதலால் நுகர்வு பொருட்களின் மீது செய்கின்ற செலவு குறைகிறது. எனவே நுகர்வு செலவு ஆனது வருமானம் அதிகரிக்கும் போது அதிகரிக்கும், ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

(2) **அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.** இது முதல் கருத்துரையின் படி தொடர்கிறது. ஏனெனில் முழுவதுமான அதிகரித்த வருமானம் நுகர்வில் முழுவதுமாக செயல்படவில்லை, மீதம் சேமிக்கப்படும் இதன் வழியில் நுகர்வும், சேமிப்பும் ஒன்றோடு ஒன்று நகர்கின்றது.

(3) **அதிகரிகின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டை அதிகரிக்க செய்யும்.** இது அதிகரித்த வருமானம் ஒன்று நுகர்வுகோ அல்லது சேமிப்பிற்கோ கொண்டு செல்லும். ஆதலால் அதிகரிகின்ற வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டையும் அதிகரிக்கும்.

இவ்விதியின் மூன்று கருத்துரைகள் பின்வரும் அட்டவணை 3–ன் உதவியுடன் விளக்கப்படுகிறது.

**அட்டவணை 3**

**விதியின் மூன்று கருத்துரைகள்.**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

### கருத்துரை (1)

வருமானம் ₹60 கோடிகளாக அதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு ₹50 கோடிகளாக அதிகரிக்கிறது.


### கருத்துரை (2)

அதிகரித்த ₹60 கோடி வருமானம் இரண்டாக, நுகர்விற்கும், சேமிப்பிற்கும் இடையே முறையே பிரிக்கின்றது. (அதாவது ₹50 கோடிகளில் மற்றும் ₹10 கோடிகளில்)

### கருத்துரை (3)

வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வு மற்றும் சேமிப்பு அதிகரிக்கின்றது. நுகர்வோ அல்லது சேமிப்போ குறையவில்லை.

இந்த மூன்று கருத்துரைகளும் வரைபடமாக 4.2ல் விளக்கப்பட்டுள்ளது. இங்கே வருமானம் படுகிடையாகவும் மற்றும் நுகர்வு சேமிப்பு செங்குத்து அச்சிலும் அளவிடப்படுகிறது. C– என்பது நுகர்வு சார்வு வளைகோடு, 45– டிகிரி கோடு வருமானம் மற்றும் நுகர்வை அளவு சமமாக இருப்பதைக் காட்டுகிறது.




வரைபடம் 4.2

### கருத்துரை (1)

120 லிருந்து 180 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வும் 120லிருந்து

170ஆக அதிகரிக்கின்றது. ஆனால் அதிகரித்த நுகர்வு அதிகரித்த வருமானத்தை காட்டிலும் 10 குறைவு. அது சேமிக்கப்படுகிறது.

**கருத்துரை (2)**

180 லிருந்து 240 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது இது இரண்டு பகுதிகளாக நுகர்வு 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பாக 10 லிருந்து 20 ஆகவும் முறையே பிரிகின்றது.

**கருத்துரை (3)**

வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை 10 லிருந்து 20ஆகவும் அதிகரிக்க செய்கிறது. C கோட்டிற்கும் $45^{0}$ கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது.

## 4.2.4 நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற காரணிகள் (அகவய மற்றும் புறவய காரணிகள்)

நுகர்வு சார்பை தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம்.கீன்ஸ் இரண்டாக பிரிக்கின்றார். அதாவது அகவய காரணிகள் மற்றும் புறவய காரணிகள்.

**அ) அகவய காரணிகள்**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. நுகர்வு சார்பை தூண்டுகின்ற முக்கிய அகவய காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கீன்ஸ் எட்டு நோக்கங்களை பட்டியலிட்டு உள்ளார். இவை தனி நபர்களை செலவு செய்வது இருந்து விலக்களிக்கிறது. அவையாவன:

1. **முன்னெச்சரிக்கை நோக்கம் :** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை
2. **எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்
3. **கணிக்கும் நோக்கம் :** விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.
4. **முன்னேறும் நோக்கம் :** வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்
5. **பணவியல் சுதந்திர நோக்கம்**
6. **வாணிப நோக்கம்** (வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்)
7. **கர்வ நோக்கம்** (விட்டுச் செல்வதற்கான விருப்பம்)
8. **பேராசை நோக்கம்** (முற்றிலும் மோசமான உள்ளுணர்வு)

கீன்ஸ் : முன்னெச்சரிக்கை, எதிர்பார்த்தல் கணித்தல், முன்னேறுதல், பணவியல் சுதந்திரம், வாணிபம், கர்வம், பேராசை ஆகியவை நுகர்ச்சியைப் புறக்கணிக்கும் நோக்கங்களாகக் கூறியுள்ளார்.

அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் வாணிப கழகங்கள், தொழிற்சாலைகளும் பின்வரும் நான்கு நோக்கங்களுக்காக முக்கியமாக சேமிக்கும்.

1. **வாணிப நோக்கம் :** கடன் இல்லாமல் மூலதன முதலீடு மேற்கொள்வதற்காக வளங்களை பெறும் விருப்பம்.

2. **நீர்மைதன்மை நோக்கம் :** அவசரகாலம், சிக்கல்களை சந்திப்பதற்காக நீர்மை வளங்களை பாதுகாக்கும் நோக்கம்.

**3. முன்னேறும் நோக்கம் :** வருமானத்தை அதிகரிப்பதற்காகவும், வெற்றி பெறும் மேலாண்மையை நிரூபிக்க வேண்டியதற்கான நோக்கம்.

**4. நிதி விவேக நோக்கம் :** கடனை செலுத்த, தேய்மானம் மற்றும் பழங்கால தொழில் நுட்பத்தை மாற்றும் நோக்கம் போன்றவற்றிற்கு தேவையான நிதி ஆதாரங்களை உறுதிப் படுத்தும் விருப்பம்.

கீன்ஸ் அகவயக் காரணிகள் குறுகிய காலத்தில் மாறாது என்றும் எனவே, நுகர்வுச் சார்பு குறுகிய காலத்தில் நிலையானது என்கிறார்.

### ஆ) புறவயக் காரணிகள்

புறவயக்காரணிகள் உண்மையான மற்றும் அளவிடக் கூடியது. நீண்ட காலங்களில் இந்த காரணிகள் எளிதாக மாற்றம் அடையும். பெரும்பான்மையான புறகாரணிகள் நுகர்வு சார்பை தீர்மானிக்கின்றவைகளாகும்.

#### 1) வருமான பகிர்வு

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும், அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர். சமநிலை வருமான பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

#### 2) விலை அளவு

நுகர்வு சார்பை மிக முக்கியமான தீர்மானிக்கின்ற காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

#### 3) கூலி அளவு

நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற முக்கியமானதாக கூலி அளவு இருக்கின்றது. நுகர்விற்கும், கூலிக்கும் இடையே நேர்மறையான தொடர்பை கொண்டு இருக்கும். கூலி அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். மேலும் எதிர்பாராத லாபம் ஏற்படும் போது இதே மாதிரி விளைவு ஏற்படும்.

#### 4) வட்டி விகிதம்

வட்டி விகிதமும் நுகர்வுச் சார்பை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும்.. அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தை சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.

#### 5) நிதி கொள்கை

அரசாங்கம் வரியை குறைக்கும் போது, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும். வளர்வீத வரிக் கொள்கையானது ஏழைகளுக்கு சாதகமான வருமான பகிர்வை தருவதால், ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.

#### 6) நுகர்வோர் கடன்

சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பொருட்களான கனரக வாகனங்கள், பிரிட்ஜ், கம்யூட்டர் போன்றவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.

#### 7) மக்கள் தொகை காரணிகள்

மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு

அதிகமாக இருக்கும். மேலும் குடும்ப அளவு, குடும்ப வாழ்கை சுழற்சி நிலை, இருப்பிடம் மற்றும் வேலைவாய்ப்பு நுகர்வுச் சார்பை பாதிக்கும். ஆரம்பநிலை கல்வி பயிலும் மாணவர்களை விட குடும்பத்தில் கல்லூரி கல்வி பயிலும் மாணவர்கள் அதிகமாக செலவு செய்வார்கள் கிராமப்புற குடும்பங்களை விட நகர்ப்புற குடும்பங்கள் அதிகமாக செலவு செய்யும்.

### 8) டூசன் பெரியின் அனுமானம்

நுகர்வு சார்பை பாதிக்கும் இரண்டு உற்று நோக்குதலை டூசன் பெரி ஏற்படுத்தியுள்ளார்.



டூசன் பெரி

அ) நுகர்வு செலவானது தற்போதைய வருமானத்தை மட்டும் சார்ந்து இல்லாமல் முந்தைய வருமானத்தையும், வாழ்க்கை தரத்தையும் சார்ந்து இருக்கும். தனி நபர்கள் குறிப்பிட்ட வாழ்க்கை தரத்துடன் வாழ்ந்து பழக்கப்பட்டு இருப்பதால், தற்போதைய வருமானம் குறைந்தாலும் தொடர்ந்து ஒரே மாதிரியாக நுகர்வு செலவு மேற்கொள்வார்கள்.

ஆ) வெளிக்காட்டும் விளைவின் காரணமாகவும் நுகர்வு தீர்மானிக்கப்படுகிறது. குறைவான வருமான உடைய மக்களும், அதிக வருமான உடைய மக்களின் நுகர்வு தரத்தால் துண்டப்படுவார்கள். மற்றொரு வகையில் ஏழை மக்கள் செல்வந்தர்களின் நுகர்வே போன்றே செலவு செய்வார்கள். இது அவர்களின் வருமானத்தையும் தாண்டி செலவு செய்ய வைக்கும்.

### 9) எதிர்பாராத லாபம் அல்லது நஷ்டம்

பங்குச் சந்தையில் ஏற்படும் எதிர்பாராத மாற்றம் லாபத்தையோ அல்லது நஷ்டத்தையே ஏற்படச் செய்து நுகர்வு சார்பை மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ நகரச் செய்யும்.

# அலகு -5: நுகர்வு கோட்பாடுகள்

## 5. நீண்டகால நுகர்வுச் சார்பு
## (Long - Run Consumption Function)

நீண்டகால நுகர்வுச்சார்பு கருத்தானது குறுகிய கால நுகர்வுச்சார்பு கருத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். கீன்ஸ் கருத்துப்படி குறுகிய காலத்தில் நுகர்வுச்சார்பு மாறாமல் இருக்கின்றது. ஏனெனில் குறுகிய காலத்தில் மக்கட்தொகை, நுகர்வோரின் பழக்கவழக்கங்கள், நுகர்ச்சிநிலை ஆகியவற்றில் மாற்றமில்லை. எனவே நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதிகரிக்கின்றது; ஆனால் அதைவிட குறைவான விகிதத்தில் அதிகரிக்கின்றது. குறுகியகால நுகர்வுச் சார்பானது சுழல் நுகர்வுச்சார்பு (Cyclical Consumption Function) எனவும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் செழிப்பான, பூரிப்பான காலங்களில் வருமானம் கூடும்போது அதைவிட குறைவான விகிதத்தில் நுகர்வும் அதிகரிக்கின்றது. அதேபோல மந்த காலங்களில் வருமானம் குறையும்போது நுகர்வும் குறைகின்றது. ஆனால் அதே அளவிற்கு நுகர்வு குறைவதில்லை.

கீன்சிற்கு பின்னால் வந்த பொருளியல் அறிஞர்கள் பொருளாதார மாற்றங்களை கணக்கில் எடுத்துக்கொண்டார்கள். பொருளாதாரம் இயக்க நிலையில் இருக்கும்போது நீண்ட காலத்தில் மக்கட்தொகை, நுகர்வோரின் பழக்கவழக்கங்கள், நுகர்ச்சி நிலை ஆகிய அனைத்தும் மாறுகின்றன. எனவே, நீண்டகால நுகர்வுச்சார்பு கருத்துப்படி, வருமானம் அதிகரிக்கின்ற அதே விகிதத்தில் நுகர்வும் அதிகரிக்கும். இதற்கு காரணம் குறுகிய

காலத்தில் மாறாமல் இருந்த அக்காரணிகள் நீண்டகாலத்தில் சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களின் காரணமாக மாறுகின்றது.

இவ்வாறு கீன்சின் நுகர்வுச்சார்பு கருத்தானது குறுகிய கால நுகர்வுச் சார்பாகும். கீன்ஸ் கருத்துப்படி, மாற்றமில்லா நிலையில் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வானது அதைவிட குறைவான விகிதத்தில் அதிகரிக்கின்றது. ஆனால் கீன்சிற்கு பின்னால் வந்த பொருளியல் அறிஞர்களின் கருத்து நீண்டகால நுகர்வுச் சார்பாகும். இதன்படி இயங்குநிலைப் பொருளாதாரத்தில் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதே விகிதத்தில் அதிகரிக்கும்.

## 6. நுகர்வுச்சார்பு கோட்பாடுகள்

நுகர்வு – வருமான தொடர்பை விளக்குவதில் மூன்று வகையான கோட்பாடுகள் உள்ளன :

1. முழுமையான வருமான கோட்பாடு
2. சார்புநிலை வருமான கோட்பாடு
3. நிலையான வருமான கோட்பாடு

### கீன்சின் முழுமையான வருமான கோட்பாடு

(Keynes' Absolute Income Hypothesis) :

இக்கோட்பாட்டின் முதற்கருத்தை கீன்ஸ் தனது "பொதுக் கோட்பாடு" என்ற நூலில் விளக்கியுள்ளார். கீன்சின் கருத்துப்படி, "சராசரியாக மக்களின் வருமானம் அதிகரிக்கும்போது அவர்களின் நுகர்வும் அதிகரிக்கின்றது. ஆனால் வருமானம் அதிகரித்த விகிதத்தில் அல்ல". இக்கோட்பாட்டை மேலும் விரிவுப்படுத்தியவர்கள் ஜேம்ஸ் டாபின் (James Tobin), ஆர்தர் ஸ்மித் ஆகியோராவர்.

முழுவருவாய் அனுமானத்தின் அடிப்படைக் கருத்து "நுகர்வுச் செலவானது முழு வருமானத்தை சார்ந்துள்ளது" (கீன்ஸ்).

ஒவ்வொரு நுகர்வோரும் தனது நடப்பு வருமானத்தில் நுகர்வுக்காக எவ்வளவு செலவழிப்பது என தீர்மானிக்கின்றனர். ஒருவரின் முழு நிலை

வருமானம் அதிகரிக்கின்றபோது, வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடுவது குறையும். முழுநிலை வருமானத்திற்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு சரிசமவீத அளவற்றது (Non Proportionate).

கீன்சின் முழுநிலை வருமான கோட்பாடு உணர்த்தும் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு :

1. நுகர்வுச் செலவானது நடப்பு முழு வருமானத்தைப் பொருத்ததாகும். முழு வருமானத்திற்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு நேரடியானதாகும்.

2. நுகர்வுச் செலவிற்கும், வருமானத்திற்கும் சரிசமவிகித தொடர்பு இல்லை. வருவாய் அதிகரிக்கும்போது, குறைந்த அளவு வருமான விகிதமே நுகரப்படுகின்றது.

3. வருமானம் அதிகரிக்கும்போது சராசரி நுகர்வு நாட்டமானது (APC) குறைகின்றது. அதே சமயம் இறுதிநிலை நுகர்வு நாட்டமானது (MPC) சராசரி நுகர்வு நாட்டத்தைவிட குறைவாக இருக்கும் (MPC<APC).

4. வருமானம் அதிகரிக்கும்போது சராசரி நுகர்வு நாட்டம் குறைவதற்கு காரணம் வருமானத்தில் சேமிக்கும் விகிதம் அதிகரிக்கின்றது.

5. ஏழைக் குடும்பங்களைவிட பணக்காரக் குடும்பங்கள் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவிடக்கூடிய விகிதம் குறைவாக இருக்கும். எனவே பணக்காரக் குடும்பங்கள் ஏழைக் குடும்பங்களைவிட வருவாயில் அதிக விகிதத்தை சேமிக்கின்றனர்.

கீன்சின் வருமான, வேலைக்கோட்பாட்டில் சராசரி நுகர்வு நாட்டம் மற்றும் இறுதிநிலை நுகர்வுநாட்டம் குறைகிறது எனற எடுகோள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதிலிருந்து வருவாய் அதிகரிக்கும்போது நாட்டு வருவாயில் அதிக விகிதமானது சேமிக்கப்படும் என தெரிகிறது. முழுவேலை நிலையை அடையவும், அதனை தக்க வைக்கவும் நாட்டு வருமானத்தில் அதிகரித்த பகுதியானது முதலீடு செய்யப்படவேண்டும்.

## சார்பான வருமானக் கோட்பாடு (Relative Income Hypothesis):

சார்பான வருமானக் கருதுகோள் கருத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் டோரதி பிரதி (Dorothy Bready), ரோஸ் பிரைடுமேன் (Rose Friedman) ஆவார்கள். இக்கருதுகோளின்படி "நுகர்வுச் செலவானது முழுநிலை வருமானத்தைச் சார்ந்ததல்ல. மாறாக சார்பான வருமானத்தைப் பொருத்தமாகும்". இக்கருத்தை ஜேம்ஸ் டுசென்பெரி (James Duesenberry) தனது நூலான "வருமானம், சேமிப்பு மற்றும் நுகர்வோர் நடத்தைக் கோட்பாடு" என்பதில் (1949) புள்ளி விபரங்கள் மற்றும் உளவியல் அடிப்படையில் விளக்கியுள்ளார்.

### எடுகோள்கள் :

டுசென்பெரி கோட்பாடானது இரு அனுமானங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.

1. தனிநபர்களின் நுகர்வு நடவடிக்கையானது தன்னிச்சையானதல்ல; பிறருடைய நுகர்வு நடவடிக்கையுடன் தொடர்புடையது. (வெளிக்காட்டும் விளைவு)

2. நுகர்வுத் தொடர்புகள் (Consumption Relations) காலப்போக்கில் மாறக்கூடியவை அல்ல. (ரேட்சீட் விளைவு)

### கோட்பாடு :

டுசென்பெரியின் சார்பான வருமானக் கோட்பாட்டின் இரு முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு :

1. தனிநபர்களின் நுகர்ச்சிச் செலவானது அவர்களது முழுநிலை வருமானத்தைப் பொருத்ததல்ல, சார்பான வருமானத்தைப் பொருத்ததாகும். (இக்கருத்து மேற்கண்ட முதலாவது எடுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது).

2. வருமானம் குறையும்போது அதைவிட குறைவான விகித்தில் நுகர்வுச் செலவு குறைகின்றது. ஏனெனில் நுகர்வோர் தங்களது கடந்த கால உயர்வான வாழ்க்கைத்தரத்தை நிலைநாட்ட விரும்புகின்றனர் (இக்கருத்து இரண்டாவது எடுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது).

## வெளிக்காட்டும் விளைவு (Demonstration Effect) :

டூசென்பெரி கருதுகோள்படி (Duesenberry Hypothesis) நுகர்வுச் செலவு முழுமையான வருமானத்தைப் பொருத்ததல்ல; சார்பான வருமானத்தைப் பொருத்ததாகும். இதனை வெளிகாட்டும் விளைவு (Demonstration Effect) என்ற கருத்து மூலம் டூசென்பரி விளக்கியுள்ளார். ஒருவரின் நுகர்வுச் செலவானது அவரது நுகர்வு நிலையைப் பொருத்ததல்ல. மாறாக அண்டைவீட்டுக்காரர்களின் (neighbours) செலவின் போக்கைப் பொருத்து அமைகின்றது. அதாவது ஒருவர் தனது சுற்றுப்புறத்தில் உள்ள மற்றவர்களுடைய நுகர்வுச் செலவையும், அவர்கள் வசதி மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதையும் பார்த்து தனது நுகர்வுச் செலவை அமைத்துக் கொள்கின்றார். குறைந்த வருமானமுடைய பிரிவினரின் நுகர்வுச் செலவானது அதிக வருமானமுடையவர்களின் நுகர்வுச் செலவினால் பாதிக்கப்படுகிறது. ஏனெனில் குறைந்த வருமானமுடையவர்கள் அதிக வருமானமுடையவர்களின் நுகர்வுச் செலவினால் பாதிக்கப்படுகிறது. இதேபோல குறைந்த வருமானமுடைய நாடுகள் அதிக வருமானமுடைய நாடுகளின் நுகர்ச்சி நிலையைப் (Consumption Standard) பின்பற்றுகின்றன. இவ்வாறு வெளிக்காட்டும் விளைவின் காரணமாக நுகர்ச்சி நாட்டம் அதிகரித்து சேமிக்கும் நாட்டம் குறைகின்றது.

## ரேட்சீட் விளைவு (Ratchet Effect) :

டூசென்பெரி கருத்துப்படி ஒருவரின் நுகர்ச்சிச் செலவானது அவரது நடப்பு வருவாயை மட்டுமல்ல, கடந்தகால வாழ்க்கைத் தரத்தினாலும் பாதிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒருவரின் வருமானம் குறையும்போது அவரின் நுகரச்சிச் செலவும் குறைகின்றது. ஆனால் வருமானம் குறையும் அளவிற்கு நுகர்வுச் செலவு குறைவதில்லை. ஏனெனில் அண்டைவீட்டார்களிடம் அவரது அந்தஸ்து நிலையை காப்பாற்றிக் கொள்ள நினைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தை பின்பற்றி வாழ்பவர்கள் வருமானம் குறைந்தாலும் தங்களது வாழ்க்கை நிலையை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். இதனை டூசென்பெரி நுகர்ச்சி பிடிப்பு என்று அழைக்கின்றார். எனவே தனிநபர்கள் தங்களது நுகர்வுச் செலவுகளை மாற்றிக் கொள்வது கடினமானதாகும்.

நுகர்வு வருமான விகிதமானது (Consumption-Income ratio) நடப்பு வருமானம் மற்றும் கடந்த காலத்தில் உச்சமாக இருந்த வருமானம் (Peak Income) இவைகளைப் பொருத்ததாகும் என டூசென்பெரியின் கருதுகோள் வலியுறுத்துகிறது. அதாவது நடப்பு நுகர்வுச் செலவானது, நடப்பு வருமானம் மற்றும் உச்சமாக இருந்த கடந்தகால வருமானம் இவைகளைச் சார்ந்ததாகும்.

**குறைகள் :**

சார்பான வருமானக் கோட்பாட்டில் பின்வரும் குறைகளை திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் :

1. நுகர்வு மற்றும் வருமான மாற்றங்கள் ஒரே திசையில் நடக்கும் என இக்கோட்பாடு கூறுகின்றது. இருப்பினும் வருமானம் சொற்பமாக குறைவதும், கொஞ்சம் நுகர்வுச் செலவு அதிகரிப்பதும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.

2. வருமானம் அதிகரிக்கும் அதே விகிதத்தில் நுகர்வுச் செலவு அதிகரிக்கிறது என இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது. ஆனால் எதிர்பாராமல் வருமானம் அதிகரித்தால், அதன் விளைவாக, குறைந்த விகிதத்தில் நுகர்வு அதிகரிக்கும்.

3. நுகர்வோரின் நடவடிக்கையை மாற்றியமைக்க முடியாது என டூசென்பெரி குறிப்பிட்டுள்ளது தவறாகும். உச்ச வருமான காலத்திற்கும், நடப்பு காலத்திற்கும் அதிக கால இடைவெளி இருக்கும் பட்சத்தில் கடந்தகால உச்ச வருமானமானது நடப்பு நுகர்ச்சியில் குறைவான பாதிப்பையே ஏற்படுத்தும்.

4. குறைந்த வருமானமுடைய பிரிவினர் அதிக வருமானமுடைய பிரிவினரின் நுகர்ச்சி நடவடிக்கைகளை பின்பற்றுவார்கள் என்பதற்கு சரியான சான்றுகள் இல்லை.

5. சார்புநிலை வருமான கருதுகோளானது இரண்டாம் உலகப்போருக்கு பிந்திய நுகர்வு வருமானத் தொடர்பை கணிக்கத் தவறிவிட்டது.